ලේකම් / செயலாளர் / Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone 2449959
ෆැක්ස් අංකය / பெக்ஸ் இல. / Fax No. 2445447
E-Mail: secretary@moj.gov.lk

ප්‍රධාන කාර්යාලය / பொது அலுவலகம் / General Office
දුරකථනය / தொலைபேசி / Telephone 2323022
ෆැක්ස් අංකය / பெக்ஸ் இல. / Fax No. 2320785
Web Site: www.moj.gov.lk

අධිකරණ අමාත්‍යාංශය

நீதி அமைச்சு

MINISTRY OF JUSTICE

ටෙලිමේල් / Tele / ரெலிமெயில் — අධිකරණ ලේකම් / நீதிச்செயலாளர் / Secminjust
තැ. පෙ. / தபால்பெட்டி / P.O. Box. 555
ඉලෙක්ට්‍රෝනික තැපෑල / மின்அஞ்சல் / E-mail info@moj.gov.lk
ශ්‍රේෂ්ඨාධිකරණ සංකීර්ණය
කොළඹ 12
மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி
கொழும்பு 12
Superior Courts Complex,
Colombo 12.

මගේ අංකය / எனது இல / My No.

ඔබේ අංකය / உமது. இல. / Your No.

දිනය / திகதி / Date 2021.06.08

சுற்றறிக்கை இல.: MOJ/SEC/01

செயலாளர்,

நீதிச் சேவைகள் ஆணைக்குழு ஊடாக,

சகல நீதிமன்றங்களுக்கும்,

<u>கொவிட் - 19 பயணக் கட்டுப்பாட்டுக் காலப்பகுதிக்குள் நீதிமன்ற கடமைகளை தொடர்ச்சியாகப் பேணிவருதல்</u>

<u>தனிப்பட்ட போக்குவரத்து வசதிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தல்.</u>

நாட்டில் நிலவும் கொவிட் - 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியிலும், நாடு முழுவதிலும் அமைந்துள்ள நீதிமன்றங்களின் கடமைகளை தொடர்ச்சியாக பேணிவருவது அவசியமாக உள்ளதனாலும், பொதுப் போக்குவரத்து வசதிகள் அமுலில் இல்லாமையினாலும், மேற்படி அத்தியாவசிய கடமைகளுக்கு சுகாதார வழிகாட்டல்களுக்கு உட்பட்டு மட்டுப்படுத்தப்பட்டதாக அலுவலர்களை அழைக்க வேண்டியுள்ளது. அவ்வாறு அலுவலர்களை சேவைக்கு அழைக்கும் போது, பொதுப் போக்குவரத்து வசதிகள் வழமைக்குத் திரும்பும் வரை அல்லது மாற்று போக்குவரத்து வசதிகளை செய்துகொடுக்கும் வரை பின்வருமாறு போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும், அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

1. தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மைல் வாடகையைப் பெற்றுக் கொள்ள உரித்துப் பெறுகின்ற அலுவலர்கள் சொந்த வாகனத்தின் மூலம் அல்லது வாடகைக்குப் பெற்றுக் கொண்ட தனியாரின் வாகனமொன்றில் சேவைக்கு சமூகமளிக்கும் போது 50 Km தூரம் எனும் வரையறைக்கு உட்பட்டு மைல் வாடகையை செலுத்தல். (சேவைக்கு வருவது மற்றும் திரும்பிச் செல்வதற்கு 100 Km எனும் உச்சளவுக்கு உட்பட்டு) 50 Km வரையறைக்கு உட்பட்டு வசிப்பிடம் / விடுதி ஆகிய இரண்டில் ஆகக்குறைந்த தூரத்தைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

2. தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8:1:2 பிரிவுக்கு அமைய பதிவாளர், பிரதிப் பதிவாளர், கணக்காளர், தொழில்நுட்ப அலுவலர் ஆகிய அலுவலர்களுக்கு 8:2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மோட்டார் வாகனத்திற்கு ஒரு கிலோ மீற்றருக்கு உரிய கட்டணங்களை செலுத்த அங்கீகாரம் வழங்குகின்றேன்.

3. மேலும் பதவிநிலை அலுவலர்கள் அல்லாத பதவியணி உறுப்பினர்களுக்கு மேலே பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தூர வரையறைகளுக்கு உட்பட்டு XIV ஆம் அத்தியாயத்தின் 8:2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மோட்டார் சைக்கில் ஒன்றுக்கான கொடுப்பனவைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. மேற்படி கொடுப்பனவை எந்தவொரு மாற்றுப் போக்குவரத்து ஊடகத்திற்கும் செலுத்துவதை அங்கீகரிக்கின்றேன்.

4. இந்த நெருக்கடிமிக்க சந்தர்ப்பத்தில் கடமைகளுக்கு சமூகமளிக்கின்ற உங்களின் பணியானது பாராட்டுக்குரியதாகும் என்பதுடன், நீதி அமைச்சு இதனை மிக்க உயர்வாக மதிக்கின்றது என்பதையும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

இந்த சுற்றறிக்கை 2021 மே மாதம் 22 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம் / எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே,
செயலாளர்,
நீதி அமைச்சு.

பிரதிகள் :

1. அரசாங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி – தயவான தகவலுக்கு
2. மேலதிக செயலாளர் (நிருவாகம்), நீதி அமைச்சு – தயவான தகவலுக்கும், உரிய நடவடிக்கைகளுக்கும்
3. பிரதம கணக்காளர், நீதி அமைச்சு – தயவான தகவலுக்கும், உரிய நடவடிக்கைகளுக்கும்